Y.M.C.A -

# புலிகளின் தாக்குதலால் விமானங்கள் பலாலியில் இறங்க முடியாதநிலை, 'அவ்ரோ' விமானம்சேதம்!


விலை ரூபா 3-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 2 றபீஉல் அவ்வல் பிறை: 29 இதழ்: 177

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19-10-1990


(காங்கேசன்துறை)

யாழ். குடாவில் கடும் தாக்குதல்களை நடத்தும் போர் விமானங்கள் வவுனியாவிலிருந்தே இங்கு வந்து செல்கின்றன.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பலாலி முகாம் பகுதியில் விடுதலைப்புலிகளின் கடுமையான தாக்குதல்களால் விமானங்கள் பலாலியில் இறங்குவது தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை பலாலியில் தாக்குல் நடத்த வந்த சீனத்தயாரிப்பான வை. 12ரக விமானம் வவுனியா பக்கமிருந்து வந்து தாக்குதல்நடத்திவிட்டு திரும்பி வவுனியா நோக்கி சென்றது.

பின்னர் வந்து தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தில் ஒரு பகுதி காங்கேசன்துறைக்கு விரைவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தில் ஒருபகுதியினர் கடந்த மூன்று தினங்களாக காங்கேசன் துறைப்பகுதிக்கு கப்பல்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தீவுப்பகுதியில் ஊரடங்கு உத்தர அமுல்படுத்தப்பட்டு அங்கிருந்து கடற்படைமுகாம் வந்த இராணுவத்தினர் கப்பல்மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டனர்.

இதேவேளை ஊர்காவற்றுறை காரைநகர் முகாம்களுக்கு ஹெலிகொப்டர்கள் அடிக்கடி வந்து செல்வதையும் காணக் கூடியதாயுள்ளது. (சி)

## பலாலிப்பகுதியில் நான்காவது நாள் யுத்தம்:

# ஒட்டகப்புலம் வசாவிளானில் புலிகள் - படையினர் மோதல்!

## இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஆறு புலிகள் வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் இடையே நேற்று நான்காவது நாளாக வசாவிளானிலும், ஒட்டகப்புலத்திலும் பலத்த நேரடி மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மோதலின்போது இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் அறுவர் வீரமரணமடைந்துள்ளனர்.

பலாலியிலிருந்து வெளியேறிய 800க்கும் அதிகமான சிங்கள இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒட்டகப்புலத்திலும், வசாவிளானிலும் கடும் மோதல் அச்சுக்குப்போகும் வரை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

மேற்படி மோதலில் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் புலிகள் தரப்பில் ஆறு போராளிகள் இதுவரை வீரமரணம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றிய செய்தியில் தெரியவருவதாவது சிங்கள இராணுவத்தினர் பலாலியில் இருந்து இடைக்காடுப் பக்கமாக வந்து விமான நிலையப்பாதையைக் கடந்து ஒட்டகப்புலம் வந்தபோது விடுதலைப் புலிகள் தடுத்துக் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். புலிகள் தரப்பில் ராபிக்(பருத்தித்துறை), செல்டன் (நாவாந்துறை), விக்டர் (புத்தளம்), ஐயன் (புத்தூர்), ரசாத் (மூளாய்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

வசாவிளான் சந்தியிலிருந்து குரும்பசிட்டி பக்கமாக நேற்று முன்னேறமுயன்ற இராணு

(4ம் பக்கம் பார்க்க)

### வசாவிளான், பலாலி மோதலில்

## 4 இராணுவம் பலி

### 46 சிப்பாய்கள் படுகாயம்

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்று வரும் யுத்தத்தில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 46 சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு பலத்த சேதம் இரத்மலானை நோக்கி விரையும் விமானங்கள்!

(கொழும்பு)

பலாலி, வசாவிளான் பகுதியில் இடம்பெறும் கடும் மோதலில் கொல்லப்பட்டவர்களினது சடலங்களையும் படுகாயமடைந்தவர்களையும் ஏற்றிய வண்ணம் இரத்மலானை விமான நிலையத்திற்கு விமானங்கள் வருவதும் அங்கிருந்து அம்புலன்ஸ் ஆஸ்பத்திரி நோக்கி விரைவதையும் நேற்று முழுவதும் அவதானிக்கக் கூடியதாயிருந்ததாம்.

இவ்வாறு நேற்றிரவு ஏஜென்ஸி செய்தியொன்று தெரிவித்தது. தொடர்ச்சியான அம்புலன்ஸ் விரைவும் விமானங்கள் வந்துபோனதிலுமிருந்து இந்த மோதலில் இராணுவத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கலாமென்றும் அச்செய்தி தெரிவித்தது. (சி)

## படகுமீது தாக்குதல்

### 5 படையினர் படுகாயம்

(மன்னார்)

தலைமன்னார் கடற்படைத் தளத்துக்கும் கற்பிட்டி கடற்படைத் தளத்துமிடையிலான கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளுக்கும், கடற்படையினருக்குமிடையே இடம்பெற்றமோதலில் ஐந்து கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

மன்னார் கடற்பிராந்தியத்தில் கற்பிட்டி கடற்படைத் தளத்துக்கும் தலைமன்னார் தளத்துக்குமிடையே தீவிர ரோந்தில் ஈடுபட்ட கடற்படை படகுகள்மீது தாக்குதல் மேற்கொண்டதில் மேற்படி கடற்படையினர் படுகாயமடைந்தனர். (153)

### மல்லாகம், உரும்பராய், கட்டுவனில்

## பொம்மர், அவ்ரோ தாக்குதல் நால்வர்பலி, பலர் காயம்

(காங்கேசன்துறை)

மல்லாகம், உரும்பராய், கட்டுவன் பகுதியில் நேற்றுக் காலை பொம்மர், அவ்ரோ மேற்கொண்ட அகோர குண்டுவீச்சில் நால்வர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர்: வீடுகள், கோயில்கள், கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன.

மல்லாகம் புங்களா லேன் அருகில் போடப்பட்ட பொம்மர் குண்டால் மல்லாகத்தைச் சேர்ந்த சதாசிவம் விமலச்சந்திரன் [27 வயது] என்பவர் பலியானார். மற்றொரு வேலைக்காரச் சிறுமியும் பலியானாள். நால்வர் காயமடைந்தனர்.

உரும்பராய் ஞானவைரவர் கோவிலடியில் நடந்த பொம்மர் தாக்குதலில் உரும்பராய் செல்வபுரத்தைச்சேர்ந்த செ. அம்பிகா [வயது 19] தழுத்து அறுக்கப்பட்ட நிலையில் பலியானார். ஐந்துபேர்

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலி விமான நிலையத்தில் 26 இராணுவம் படுகாயம்

(கொழும்பு)

பலாலி விமானநிலையம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பலத்த ரொக்கட் தாக்குதலில் 23 படையினர் பலத்த காயமடைந்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விமான ஓடுபாதையும் தாக்குதலால் பெருமளவில் குன்றும் குழியுமாக காணப்படுவதாகவும் அரசு தரப்பை ஆதாரம் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன.

பலத்த காயமடைந் படையினர் அநுராதபுரத்திற்கும் கொழும்பிற்கும் ஹெலிமூலம் கொண்டுசெல்லப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. (சி)

## ★ கோட்டை சேதங்களைப் பார்த்தபோது

# படையினரின் 'குண்டு'களிலும் பார்க்க

# புலிகளின் 'ஷெல்' சக்திமிக்கதென தெரிந்தது

யாழ். முற்றவெளியில் 'தேனிசை' செல்லப்பாவின் இசைநிகழ்ச்சி நடைபெற்றபோது, கோட்டையின் பண்ணை முனை கொத்தளத்திலிருந்து இராணுவத்தினர் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்த வெளிச்சத்தில் கோட்டையின் அப்பகுதியில் தலைகளின் அசைவுகள் தெளிவாகத் தெரிந்தது. அந்தப் பகுதியில்தான் நாங்கள் இப்போது நிற்கின்றோம்.

## சகல கட்டடங்களும் முற்றுகச் சேதம்!

அதிலிருந்து பார்த்தபோது முற்றவெளி தெளிவாகத் தெரிந்தது. பெருந்தொகையான மக்கள், அந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பார்கள்என்பது கோட்டை உச்சியிலிருந்து பார்த்தபோதுதான் தெரிந்தது. அந்த நிகழ்ச்சியின்போது கோட்டை மைதானம் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது.

### பொலிசார் கடமை

நாங்கள் நின்ற பண்ணைப் பகுதி கொத்தள முனைகளில் பொலிசார்தான் சென்றிகளில் கடமையாற்றியிருந்தார்கள்.

ஒரு சென்றிக்கு அருகே 'தாழ்வாரம்' ஒன்று இறக்கப்பட்டிருந்தது. அது அடுப்படியாகப் பாவிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அது தமிழ் பொலிசார் பாவித்திருக்க வேண்டும் என்பது தெரியவந்தது. தமிழ் வீடுகளைப்போல் வீட்டோடு சேர்த்து 'தாழ்வாரம்' இறக்கப்பட்டிருந்தது. அதற்குள்ளே 4அங்குல கங்கிறீட் கல் மூன்று அடுக்கி அடுப்பு மூட்டப்பட்டிருந்தது. அடுப்புக்குள் சாம்பல் நிறைந்திருந்தது. அருகில் பேணிகள், கோப்பைகள் காணப்பட்டது.

மற்றெரு சென்றிக்குள் சென்று பார்த்தபோது இரு கட்டில்கள் காணப்பட்டன. அங்குள்ள மெத்தைகளில் 'பொலிஸ்' என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்து அந்த 'சென்றி'யைப் பொலிசாரே பாவித்திருந்தனரென்பது உறுதியாகியது. மற்றச் சென்றிகளிலும் பார்க்க, இந்த பொலிசாரின் சென்றி கொஞ்சம் துப்பரவாக இருந்தது. பவுடர் வெற்றுரின்கள், லக்ஸ்சோப் உறைகள், அங்கர் பால்மாடின், குளுக்கோஸ் பெட்டிகள். இப்படி பலவாறன பொருட்கள் சிதறிக் கிடந்தன. நூளம்புவலை ஒன்று நிலத்தில் கிடந்தது, அது சொற்ப காலந்தான் பாவித்திருக்க வேண்டும். புதிது போலகாணப்பட்டது, பெரிய குடை ஒன்றும் கைப்பிடி முறிந்த நிலையில் காணப்பட்டது.

படப்பிடிப்பாளர் தேவா அந்தக் குடையைப் பார்த்தது: 'எடுத்து பாவிப்போமா?' என்று கேட்டார். அப்போதும் மழை சிறிது தூறிக் கொண்டிருந்தது. 'அண்ணே தொடாதீர்கள் சிலவேளை குண்டு ஏதாவது இருக்கும்' என்று பத்திரிகையாளர் ஒருவர் எச்சரித்தார். நான் குனிந்து அந்தக் குடையை எடுத்துப் பார்த்தேன். கைப்பிடி இல்லை. ஆனல் அது ஒரு புதிய குடையாகத்தெரிந்தது. அப்படியே போட்டுவிட்டேன்.

ஒற்றைவழிப் பாதையால் தான் வருமாறு வழிகாட்டி 'பிட்டர்' அடிக்கடி ஆலோசனை கூறியிருந்தார். நான் 'ஹெலி' வருகிறதா? என்று வானத்தைப் பார்த்தவாறு நடந்து சென்றபோது அந்த ஒரு அடிப் பாதையைவிட்டு சில இடங்களில் விலகிச் சென்றுவிட்டேன். அப்போதெல்லாம் வழிகாட்டி, பாதையால் வருமாறு கூறினர். ஒரு சமயம் நான் பாதையைவிட்டு விலகிவந்தபோது பாதைக்கு வெளியில் கிடந்த பனஞ்சிராய் ஒன்று விரலில் குத்திவிட்டது. இரத்தம் கசிந்தது. அதன்பின் அந்த ஒற்றையடிப்பாதையால்தான் வந்தேன்.

### தபால் கந்தோர்

யாழ். தபால் கந்தோர் பகுதிக்கு வந்துவிட்டோம். மேலே இருந்து பார்த்தபோது சேதம் அடைந்த தபால்கந்தோர் தெளிவாகத் தெரிந்தது.

### சென்றிகள் இல்லை

அங்கு வந்தபோது 1967ம் ஆண்டு நடந்த சம்பவம் ஒன்று ஞாபகம் வந்தது. அப்போது கோட்டையில் இராணுவத்தினர் கிடையாது.

**கா. யோகநாதன்**

மேலே கொத்தளத்தில் சென்றிகளும் இல்லை. சிறைச்சாலையில் கைதிகள் தான் இருந்தார்கள். சிங்கள கைதிகளும் இந்தக் கோட்டை சிறைச்சாலையில் இருந்தனர்.

### கைதி தப்பினர்

ஒருநாள் நண்பகல் 11 மணியளவில் 'சீனு' என்ற சிங்கள கைதி ஒருவர் கோட்டை மதிலில் கயிறைக்கட்டி கீழே இறங்கி எப்படியோ அகழியைக் கடந்து தபால் கந்தோர் வீதியால் பெரிய கடைக்கு சென்று லொறி ஒன்றில் ஏறி தப்பிவிட்டார்.

அரைமணி நேரத்தின்பின்னர் பொலிஸாரும் சிறைக் காவலர்களும், மிட்டாஸ் கடைச்சந்தி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலையவீதி எல்லாம் தேடுதல் நடத்தினர்கள். அவர் சிக்கவில்லை. பின்னர் நண்பகல் சுற்றிவளைத்து அவரை பிடித்து விட்டார்கள்.

இப்படி கோட்டைக்குள்ளே இருந்து பல தடவை கைதிகள் தப்பிச்சென்ற சம்பவங்கள் உண்டு. சிறைக்காவலர்களை மீறி வாசல்பகுதியால் கைதிகள் சென்றுவிடமுடியாது. அல்லது அவர்களின் நண்பர்கள் வந்திருந்தால் அவர்களுடன் அதிலிலிருந்து பேசியிருக்கலாம்.

அப்பகுதியில் புத்தம் புதிய மடித்துத்தூக்கி செல்லக்கூடிய படுக்கைகளும் காணப்பட்டன

கீழ்ப்பகுதியை எட்டிப் பார்வைபிட்டேன். இராணி மாளிகை, பொலிஸ் அதிபர் விடுதி கூரைகள் காணப்பட்டன. ஒரு சில ஓடுகளை தவிர புலிகளின் தாக்குதலுக்கு எல்லாம் உடைந்து விழுந்து நொருங்கியிருக்கின்றன.

பொம்மர். வை-12 விமான தாக்குதலினுலும், யாழ். நகரப்பகுதியில் வீடுகள் கடைகள் சேதமடைந்திருந்ததை பார்த்திருக்கிறேன். ஆனல் தொடர்ச்சியாக அருகருகில் உள்ள வீடுகள் சேதமடையவில்லை. குண்டு விழுந்த பகுதியில் உள்ள வீடுகள் மட்டும்தான் சேதமடைந்திருந்தன. கோட்டையில்

## யாழ். கோட்டைக்குள் 3 மணி நேரம் - 4

அதனுல் மதிலை கடந்து அகழி ஊடாகவே செல்லவேண்டும்.

### பதுங்கு குழிகள்

மேல்பகுதியில் சில சென்றிக்கு அருகில் பதுங்கு குழியும் காணப்பட்டன. இரண்டு மூன்று அடி ஆழமாகக்காணப் ஒரு பதுங்குகுழிக்குள் டோச்லைட் ஒன்று இருந்தது. எங்களுடன் வந்த வழிகாட்டி அதற்குள் இறங்கி அதனை எடுத்தார். இரவு கடமையாற்றியவர்கள் புலிகளின் தாக்குதலினுல் நிலை கலங்கி அவசர கோலத்தில் அந்த டோர்ச்லைட்டையும் கைவிட்டு ஒடிச் சென்றிருக்கவேண்டும்.

மற்றெரு சென்றிக்கு அருகில் இரண்டு மூன்று கதிரைகள் சுற்றிவரப்போடப்பட்டிருந்தது. சென்றியில் கடமையாற்றும் படையினர் சில நேரங்களில் அந்தக் கதிரையில் இருந்திருக்கவேண்டும் உள்ள 14 ஏக்கர் நிலப்பரப்பில் மைதானத்தை நீக்கினுல் மிகுதி எட்டு ஏக்கர்வரை கட்டடங்கள்தான். தேவாலயம், இராணி மாளிகை, சிறைச்சாலை, பொலிஸ் அதிபர் விடுதி, அதற்கப்பால் விகாரை கோவில் இப்படி எங்கும் கட்டடங்கள்தான்.

புலிகளின் ஷெல் தாக்குதலுக்கு ஒரு கட்டடம்கூடத் தப்பவில்லை. 8 ஏக்கரிலிருந்த அத்தனை கட்டடங்களும் சேதமடைந்திருந்தன. அதுமட்டுமல்ல மைதானத்திலிருந்த மரங்களும் முறிந்து விழுந்திருந்தன. வாகனங்களும் சேதமடைந்திருந்தன. படையினரின் குண்டுகளிலும் பார்க்க புலிகள் தயாரித்த 'ஷெல்'கள் சக்திவாய்ந்ததாகக் காணப்பட்டது.

(தொடரும்)

---

பாதிக்கப்பட்ட

## தீவுப்பகுதி மக்களுக்கு உணவு விநியோகம்

[வேலணை]

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைளினுல் பலவழிகளினுலும் பாதிக்கப்பட்ட தீவுப் பகுதி மக்களுக்கென உணவுத் திணைக்களத்தின் அமேசன் கப்பல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்களை தீவுப்பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்கப் பட்டுவருகின்றன.

புங்குடுதீவு மக்களுக்கு புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கமும் வேலணை மக்களுக்கு வேலணை ப. நோ. கூ. சங்கமும் இப் பொருட்களை தனது கிளைகள் மூலமாக விநியோகித்து வருகின்றன.

---

அங்கவீனர்களுக்கு

## சுயதொழில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கை மற்றும் வன்செயல்களினுல் தமது கை, கால் போன்றவற்றை இழந்த மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கமாக சுண்டுக்குளியிலுள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகம் வெகு விரைவில் ஒரு திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி திட்டத்தின் அடிப்படையில் செயற்கை உறுப்புகள் பொருத்துதல், அங்கவீனர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் இடம் பெறவிருக்கின்றன.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் சகல விதமான வைத்திய சான்றிதழ்களுடன் சுண்டுக்குளி பழைய பூங்காவீதியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் தொழிலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி டாக்டர் திருமதி தெய்வேந்திராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். [153]

---

## இராசி பலன்

**19 - 10 - 1990**
**வெள்ளிக்கிழமை**

பிரதமை மு. இ. 10-27 வரை, சித்திரை மு.ப.8-07 இராகுகாலம் காலை 10-32 முதல் 12-02 வரை. சித்த யோகம், கந்தசஷ்டி விரதம், நல்லநேரம் காலை 6-02 முதல் 8-02 வரை.

மேடம்; அறிஞர் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, செய்நன்றி மறத்தல், தொழில்லாபம்.

இடபம்; கடன்வசூல், புதிய தொழில் முயற்சி, அதிகாரிகள் பாராட்டு, நற்செய்தி.

மிதுனம்; தாழ்வு மனப்பான்மை, சோம்பல், குடும்ப அலைச்சல், சிநேகபகை.

கடகம்; ஏமாற்றம், பண்பற்ற செயல், குடும்ப பிரிவு, தாய்வழித்தொல்லை.

சிங்கம்: தொழில்லாபம், நண்பர்கள் சகாயம், வீட்டில் சுபகாரியம், தானதர்மம்.

கன்னி: மனக்கவலை, தொழில் பிரச்சனை, மனகிகஷ்டம், குடும்பத்தில் குழப்பம்.

துலாம்: பதவி மாற்றம், தொழில் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திரர் மகிழ்ச்சி.

விருச்சிகம்: வைத்திய செலவு பயணங்களால் அலைச்சல், ஆடம்பரம், மனக்கவலை.

தனுசு: காரியபலிதம்: நீண்டநாள் பகை விலகும், அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி.

மகரம்: பணக்கவலை, குடும்பத்தில் கருத்து முரண்பாடு, தொழில்போட்டி, மனச்சுமை.

கும்பம்: அதிஷ்டமின்மை, காரிய நஷ்டம், தொழில் குறைவு, சிநேகிதர் பகை.

மீனம்: விபத்துக்குள்ளாகுதல், பகைவர் தொல்லை, பணமுடை, அகால போஜனம், பிரிவு.

**ஜோஸ்யர்.**

---

## முதலுதவி சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

கட்டுடை சந்தியில் முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்று அண்மையில்திறந்து வைக்கப்பட்டுள்ளது. கட்டுடை சன சமூக நிலையத்தில் முறை சாராக்கல்விப் பிரிவின் ஆதரவில் நடாத்தப்பட்ட முதலுதவிப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்கள் இதில் கடமையாற்றி வருகின்றார்கள்.

காலை எட்டு மணி முதல் மாலை ஆறு மணி வரை இந்த முதலுதவி சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றது. (72)

---

சொந்த

## இடங்களுக்குத் திரும்புகின்றனர்

(வேலணை)

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைளினுல் பாதிக்கப்பட்ட அல்லைப் பிட்டி, மண்டைதீவுப் பகுதிகள் மீண்டும் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே அகதிகளாக இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றவர்களும் சிறிது சிறிதாக தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர்.

---

## கட்டுத்துவக்கில் சிக்கிகாயம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் கட்டுத்துவக்கில் சிக்கிய ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படிநபர் பூநகரி பத்தினியார் காட்டில் வயலுக்குப் பாவிப்பதற்காக சருகுக் குப்பை அள்ளிக்கொண்டிருந்தபோதே மறைவாகக் கட்டப்பட்டிருந்த கட்டுத் தோட்டாவில் தடக்கி துப்பாக்கி வேட்டுக்கிலக்கானர். இச்சம்பவத்தில் பூநகரியைச் சேர்ந்த க. ஸ்ரீதரன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார். (56)

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அதிசிறந்த இன தோடம் கன்றுகள் ஒரு வருடத்தில் பலன்தரக்கூடியன. விற்பனைக்குண்டு. ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள். பகல் 12 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும். பொ. துரை ஐயா, நிலாவரையடி, நவற்கிரி. புத்தூர். (சி 4116)

# ஈராக் படைகள் வாபஸானால் அமெரிக்காவும் வெளியேறும்

## அதிபர் புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

குவைத்திலிருந்து ஈராக்கிய படைகள் வெளியேறும் பட்சத்திலேயே அமெரிக்கப்படைகளும் வளைகுடாவிலிருந்து வெளியேறும் என அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன் தினம் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவ்வுரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

குவைத்தில் ஈராக்கிய படைகள் பெரும் அட்டூழியங்களைச் செய்துவருகிறது. அப்பாவிப் பொதுமக்கள் பலர் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். முக்கிய பல பகுதிகளும் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைகளில் நோயாளிகள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்: பெற்றோர் முன்னிலையில் பிள்ளைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை குவைத் வைத்தியசாலைகளில் அமெரிக்கத் தொலைக்காட்சிப் படங்கள் ஈராக்கின் கடும் தணிக்கையின் பின் காண்பிக்கவும் ஈராக் அனுமதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுறது. (சி)

# இராணுவ நடவடிக்கையால் சின்ன மூளாய் மக்கள் சுருவிலில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

சின்ன மூளாய்ப் பகுதி மக்கள் இராணுவத்தினரின் நடவடிக்கையின்போது முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர்.

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அச்சமடைந்த அப்பகுதிமக்கள் உடமைகளையும் விட்டுவிட்டு அவசர அவசரமாக வெளியேறி சுருவில் பகுதியிலும் மற்றும் அயற் கிராமங்களிலும் குடியமர்ந்துள்ளனர். (56)

# 60,000 கைதிகளை விடுவிக்க தெ.ஆபிரிக்க அரசு இணக்கம்

## மண்டேலா தகவல்

(புதுடில்லி)

தென்னாபிரிக்காவில் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்ட சுமார் 60,000 கறுப்பின அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அந்நாட்டு அரசு முன்வந்துள்ளதாக டாக்டர் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே திரு. நெல்சன் மண்டேலா இதனைத் தெரிவித்தார்.

வன்முறை குற்றச்சாட்டுகள் உட்பட அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சுமார் 60,000 கறுப்பினத்தவர்கள் கடந்த 5 வருடங்களாக சிறையிலிடப்பட்டுள்ளனர். இவர்களைக்கட்டம் கட்டமாகவிடுவிக்க தற்போது அரசு இணங்கியுள்ளது.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திற்கிடையில் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிடுவார்கள் என்றும் அரசு அறிவித்துள்ளதாகவும் திரு. மண்டேலா தெரிவித்துள்ளார். (சி)

## உணவுப் பொருள்

# இறக்குவதற்கு நின்ற வத்தை கடலில் மூழ்கியது

(மாங்குளம்)

முல்லைத்தீவில் இராணுவம் நிலை கொண்டுள்ளதால் இறங்குதுறையில் கப்பல் உணவுப் பொருட்கள் பறிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

பல சிரமத்தின் மத்தியில் அதிகாரிகளின் ஊக்கத்தினால் முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து உணவுப்பொருட்கள் பறிக்கப்பட்டன.

கப்பலிருந்து உணவுப் பொருட்களை இறக்குவதற்கு தரித்துநின்ற வத்தை கடலில் மூழ்கியுள்ளது. கடலலை கரை தட்டியதால் மூழ்கடித்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (150)

## தீபாவளி

# வெடிவிபத்து 19 பேர் பலி

(சென்னை)

தீபாவளித் தினத்தை முன்னிட்டு, நேற்று முன் தினம் இரவு திண்டுக்கல்லில் வெடி கொளுத்தி விளையாடியதில் ஏற்பட்ட விபத்தில் 19 பேர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர். (வி)

# பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. சு. பரராசசிங்கம் முல்லைத்தீவு மாவட்டத் தபால் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். (54)

## இந்தியா உதவி

# கறுப்பின போராட்டத்திற்கு 50 லட்சம் டாலர் கையளிப்பு

(புதுடில்லி)

தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் போராட்டத்திற்கு இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன் இதற்காக ஐம்பது லட்சம் டாலரையும் டாக்டர் நெல்சன் மண்டேலாவிடம் கையளித்துள்ளது.

ராஷ்ரபதி பவனில் ஜனாதிபதி அளித்த விருந்துபசாரம் ஒன்றில் இதற்கான காசோலையை ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் திரு. மண்டேலாவிடம் கையளித்தார்.

இவ்வைபவத்தில் பிரதமர் திரு. வி. பி. சிங், எதிர்க்கட்சித் தலைவர் திரு ராஜீவ் காந்தி உட்படப் பல அமைச்சர்களும் கலந்துகொண்டனர். (சி)

## கர்நாடக

# புதிய முதலமைச்சருக்கு கருணாநிதி வாழ்த்து

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக திரு. எம். பங்காரப்பா நேற்றுமுன் தினம் பதவி ஏற்றுக்கொண்டார். மத்திய அரசாங்கம், கர்நாடகத்தில் ஜனாதிபதி ஆட்சியை விலக்கிக் கொண்டதையடுத்து பங்காரப்பா புதிய கர்நாடகத்தின் முதலமைச்ரராக பதவியேற்றார்.

முன்னால் கர்நாடக முதலமைச்சர் விஜேந்திரபட்டீல் பதவிவிலக மறுத்தமையாலும், அவரது சக அமைச்சர்கள் ராஜினமா செய்தமையாலும் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அடுத்து கர்நாடகத்தில் நடுவன் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.

இந்திரா காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த நூற்றிஐம்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசாங்கத்தின் நிலையைக் கண்டித்து ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியதையடுத்து' கர்நாடகத்தில் ஜனாதிபதி ஆட்சியை விலக்கி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் பதவியேற்க வழிசெய்வதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

புதிய கர்நாடக முதலமைச்சராக திரு. எம். பங்காரப்பா பதவியேற்றதையடுத்து தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி வாழ்த்துச்செய்தியொன்றை நேற்று அனுப்பி வைத்தார். (ச)

# வைத்திய நிபுணர்களை அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு பத்து வைத்திய நிபுணர்களை அனுப்புவதற்கு சுகாதார அமைச்சு ஏற்பாடுகள் செய்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வைத்திய நிபுணர்கள் மிக விரைவில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பார்கள் எனவும் இச்செய்தி மேலும் தெரிவித்தது. (வி)

## பாகிஸ்தான் தேர்தல் களம்

# தேர்தல் விஞ்ஞாபனங்களை கட்சிகள் வெளியிட்டன

(கராச்சி)

பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிடும் மக்கள் கட்சி அணியும், ஜனநாயகக் கட்சி அணியும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை நேற்றுத்தான் வெளியிட்டுள்ளன. இரு தேர்தல் விஞ்ஞாபனங்களும், பாதுகாப்பு, வெளிநாட்டுக்கொள்கையில் ஒரே மாதிரியான கொள்கைகளைக் கடைப்பிடித்திருந்தாலும் காஷ்மீர் பிரச்சினையில் நிலையான கொள்கையைக் கடைப்பிடிப்பதாக உறுதியளித்துள்ளன. பொதுவான வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, தேச நலனில் அதிகளவு வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. இம்முறை பாகிஸ்தானில் தேர்தல் வேட்பாளர்களின் ஆளுமைக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்களேயொழிய தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன் வெளியாகிய தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு வாக்களிக்கமாட்டார்கள் என அரசியல் நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ள இதேவேளையில் நீதியான ஜனநாயக தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி காபந்து அரசாங்கத்துக்கும், படைத்தலைவர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார். அதேவேளையில் தேர்தல் பிரசாரங்களில் ஊழலை தடுப்பதற்கு உயிரையும் தியாகம் செய்யவிருப்பதாக முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிஸ் பூட்டோ உறுதியளித்துவருகின்றார். பாகிஸ்தான் பொதுத்தேர்தல் இம்மாதம் இருபத்திநாலாம் திகதியும் மாகாண சபை தேர்தல் இருபத்தேழாம் திகதியும் நடைபெறவுள்ளது. (ச)

## பாதிக்கப்பட்ட

# தனியார் பஸ் உரிமையாளர் நஷ்டஈடு பெறுவார்கள்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளது.

''நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினால்பெருந்தொகையான தனியார் பஸ்கள் சேதப்படுத்தப்பட்டும், எரிக்கப்பட்டுமுள்ளன.

இதனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நஷ்டஈடு வழங்கவேண்டும்'' எனக் கோரி இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், நெடுஞ்சாலைகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்ததின் பேரில் அமைச்சர் நஷ்டஈடு வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றன. (வி)

## 5 வயதிற்குட்பட்ட

# சிறுவர்கள்பற்றிய கருத்துக் கணிப்பு

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றி பிரிட்டனிலுள்ள கருத்துக்கணிப்பு நிறுவனமொன்று நடாத்திய முடிவில் பலருசிகர முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிவுகளின்படி ஐந்து குழந்தைகளில் ஒருவருக்கு ''டெக்''குகளை இயக்கி படம் பார்க்கும் திறமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அப்பா, அம்மாவுக்கு இதனை இயக்க தெரிந்திருக்கவில்லை. கம்பியூட்டர் பற்றிய அறிவைப் பெற்றிருக்கிறார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நீண்ட நேரம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகள், பொம்மைகளை அணைத்துக்கொண்டு தனியாக தூங்கவே விரும்புகிறார்கள்.

புத்தகங்கள் படிப்பதை விரும்பவில்லை. நீண்ட நேரம் ரெலிவிஷன் நிகழ்ச்சிகளை குழந்தைகள் பார்த்துக் கொண்டிருப்பதால், பெற்றோர் குழந்தைகளின் தொல்லைகள் இல்லாமல் பணிகளைச் செய்ய வாய்ப்பு இருப்பினும் குழந்தைகளின் மனக்கணிப்பு, உடலுறுப்பு பாதிக்கப்படுவதாக கூறியுள்ளது. (ச)

# குரக்கன் விதை வழங்கப்படும்

(வேலணை)

சிறு தானிய பயிர் வகைகளை உற்பத்தி செய்யும் நோக்கிற்கு முதல்படியாக தீவுப் பகுதியில் உள்ள மேட்டுநில விவசாயச் செய்கையாளர்களுக்கு குரக்கன் விதையினை வழங்கியுதவுவதற்கு வேலணைப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. ஆ. ச. நா. இராசையா முன்வந்துள்ளார்.

நல்ல ரக குரக்கன் விதைகளை வேலணை விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒயில் திருட்டால் மின்சாரத்தடை!

(யாழ்பாணம்)

வடமராட்சிக்கு நீண்ட காலத்திற்குப்பின் மின்சாரம் கிடைத்த போதிலும் ஒயில் திருட்டால் சில கிராமங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை.

மூத்தவிநாயகர் ஆலயம், நெல்லியடி, மாலிச்சந்தி, அல்வாய் வடக்குப் பகுதிகளுக்கு ஒயில் திருட்டால் இன்னு மின்சாரம் கிடைக்கவில்லை. (150]

# மண்ணின் விடுதலைக்கேற்ப புதிய கல்விக் கொள்கை

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணின் விடுதலைப் போராட்டத்திற்கு ஏதோ ஒருவிதத்தில் புதிய கல்விக் கொள்கைத் திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு நேற்றுமாலை கந்தர்மடம் யூனிவேர்சல் நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் திரு. எஸ். வரதராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்ட கல்விமுறையானது மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்கவிடாமல் தடுக்கிறது. கல்விமுறையில் பல மாற்றங்கள் அவசியமாகும்: காலப்போக்கிலான மாற்றத்தை உருவாக்க இன்று வித்திடுகிறோம்.

எமது தாயகத்திற்கு இன்று ஒரு கல்விக்கொள்கை உருவாகும்வரையும் புதிய கல்விப் போதனைகளும் இதுவரை இருக்கும் வழமையான கல்வி குறையுடன் இணைப் பாடமாகக் கற்பிக்கப்படும்.

புதிய சிந்தனைகளை ஏற்பதற்கு மாணவர்கள் தயாராக இருக்கவேண்டும், மண்ணின் விடுதலையை நேசியுங்கள் என்றார். (153)

---

காரைநகரில்

## கடற்படையினர் தாக்குதல் இருவர் காயம், மாடு பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று காலை மேற்கொள்ளபட்ட ஷெல், துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர். மாடொன்று பலியானது.

அதிகாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் கருங்காலியில் வீடொன்றில் வீழ்ந்து வெடித்ததில் ந. தனேந்திரன் (வயது 6) என்ற சிறுவன் காயமடைந்தார். வீட்டில் நின்ற மாடு பலியானது.

வயலில் வேலையில் ஈடுபட்டிருந்த எஸ். ஈசு (வயது 22) என்ற இளம் பெண் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்தார். [சி]

## முடிவடையும் நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தின் திருத்தவேலைகள் யாவும் திருத்தி முடிவரையும் கட்டத்தில் உள்ளது என்று தெரியவருகிறது. (153)

## போலியோ தடைமருந்து

(வேலணை)

வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் 10 வயதுக்குட்பட்ட சகலபிள்ளைகளுக்கும் போலியோ இளம்பிள்ளைவாத தடைமருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக தீவுப்பகுதியில் போலியோ இளம்பிள்ளைவாத நோய்கள் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக சுகாதார வைத்திய அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

---

வடக்கு, கிழக்கு தவிர்ந்த இடங்களில்

## உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்த முடிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்துவது குறித்து எதிர்கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாடொன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இம் மாநாட்டிற்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமை தாங்கினார்.

தற்போதைய சூழ்நிலையில் வடக்கு கிழக்கு தவிர்ந்த மாகாணங்களில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தலாம் என இணக்கம் காணப்பட்டுள்ளது. உள்ளூராட்சி தேர்தல்கள் அடுத்தாண்டு ஜனவரியில் நடைபெறவுள்ளது: (ச)

## முல்லைத்தீவுக்கு உணவுப்பொருள்

(மாங்குளம்)

முல்லைத்தீவுக்கு விங்கோரேடர்ஸ் கப்பலில் 200 மெட்றிக் தொன் அரிசியும், பருப்பு, கௌபி, சவர்க்காரம் தேயிலை சீனி 160 மெட்றிக் தொன் உணவுப் பொருட்கள் பறிக்கப்பட்டுள்ளன.

சிகிரியா கப்பலில் இப்பகுதிக்கு 200 மெட்றிக் தொன் மாவும் வந்து சேர்ந்துள்ளது. (150)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனில் நேற்றுக்காலை 10-30 மணியளவில் பொம்மர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ரகீம் வீரமரணம் அடைந்தார். (வி]

### வசாவிளான்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் இலங்கை பாதுகாப்பு இணையமைச்சர் திரு. ரஞ்சன் விஜரவர்த்தன, நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

மேற்படி மோதல் பற்றி இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

மழைகாலம் தொடங்குவதற்கு முன் பலாலி பகுதியை சுற்றியுள்ள விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்களை நாம் அழித்துவிடவேண்டும். இல்லையேல் மழைகாலங்களில் இராணுவத்தினர் பலாலிப் பகுதியில் தரித்திருப்பது பெரும் இடையூறுகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்றார். (வி)

### பலாலிப்பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினரை விடுதலைப் புலிகள் தடுத்து தாக்கியபோது மரியதாஸ் என்பவர் வீரமரணமடைந்தார். [வி]

### மல்லாகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தனர்.

அதே பகுதியிலுள்ள கற்பகப்பிள்ளையார் கோவிலடியில் விசப்பட்ட மற்றுமொரு குண்டுவீச்சில் ஆறுபேர் படுகாயமடைந்துள்ளனர். அடுத்துள்ள கிறீஸ்தவ தேவாலயத்தின்மீது வீழ்ந்த மூன்றாவது குண்டுவீச்சுக்கு தேவாலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதற்கு அருகாமையிலுள்ள வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

கட்டுவன் ஊரங்குணையில் வை. 12 ரக விமானத் தாக்குதலால் எஸ். தம்பிஐயா என்ற [60 வயது] வயோதிபர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர். [86-153)

---

மத்திய கிழக்கிலிருந்து

# இலங்கை திரும்புவோருக்கு வைத்திய பரிசோதனை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து தற்போது இலங்கை வரும் அனைவரையும் உடன் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சுகாதார அமைச்சு பணித்துள்ளது.

மேற்படி இடங்களில் இருந்து வரும் அனைவரின் விபரங்களையும் பதிவுசெய்வதற்கென விசேடமாக அச்சிடப்பட்ட ஐம்பதாயிரம் அட்டைகளை, சுகாதார அமைச்சு கட்டுநாயக்கா விமான நிலயத்துக்கு அனுப்பியுள்ளது.

இலங்கை திரும்புவதற்கு முன்னர், இவர்கள் பல்வேறு இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்து பின்பு இலங்கை வருவதால்பல விதமான தொற்றுநோய்களை இவர்கள் உள்நாட்டுக்குள் பரப்பக்கூடும் என்பதினாலேயே இப்பரிசோதனை நடத்தப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. [வி)

---

வலி வடக்கில்

## 'ஹெலி'யிலிருந்து கடுமையான கிரனேட் தாக்குதல்

(காங்கேசன்துறை)

வலிவடக்கில் நேற்றுமுன்தினமிரவு ரோந்து சுற்றிய ஹெலி ஒன்று கடுமையான கிரனேட் தாக்குதலை மேற்கொண்டது.

தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் நீண்டநேரம் ரோந்துசுற்றிய ஹெலிகலிபர் தாக்குதலை மேற்கொண்டதுடன் கடுமையான 'கிரனேட்' தாக்குதலையும் மேற்கொண்டது.

சிலவீடுகள் சேதமடைந்ததாகவும், உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (86)

## அவசரகால பணி

[யாழ்ப்பாணம்]

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் முதலுதவிப் பயிற்சி பெற்ற சகல மாணவர்களும் தமது பிரதேசத்திற்கு அருகிலுள்ள முறைசாராக் கல்வி முதலுதவி மையத்துக்கு சென்று அவசரகாலப் பணிகளை உடன் மேற்கொள்ளுமாறு முறைசாராக் கல்வி அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார், (153)

## உணவுக் கப்பல் வந்தது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை. துறைமுகத்திற்கு நேற்றுக்காலை 'குமண' என்ற கப்பல் வந்தடைந்தது.

மேற்படி கப்பலில் உணவுப் பொருட்கள் மட்டுமே வந்ததாகவும் தபாற்பொதிகள் வரவில்லை என்று தெரியவருகிறது. (153)

---

இலங்கை - இந்திய

# ஒப்பந்தத்தில் மாற்றங்கள் இந்தியாவின் போக்கில் கடுமை

(புதுடில்லி)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் பல மாற்றங்கள் ஏற்படக்கூடிய நிலையொன்றை இலங்கை அரசு தோற்றுவித்திருப்பதையடுத்து இந்தியாவின் போக்கில் கடுமையான மாற்றய்கள் தென்படும் அறிகுறி தோன்றியுள்ளது:

இதுபற்றி கொழும்பிலுள்ள இந்திய தூதரக பேச்சாளர் திரு. எஸ். சிங். கருத்தும் தெரிவித்துள்ளார். அவர் இது பற்றி கூறுகையில்;

இலங்கை-இந்திய ஒப்பந்தம் அதன் அமுலாக்கல் தொடர்பான தனது கடப்பாட்டில் இந்தியா கண்டிப்பாயுள்ளது. வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு, அதிகாரப்பரவலாக்கல் மற்றும் சில விடயங்களில் இந்தியா உறுதியாயுள்ளது. நேரம் வரும்போது இந்தியா தனது கடமையைச் செய்யும் என்றார்: (சி)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய அவ்ரோ விமானமும் வவுனியா பகுதியிலிருந்து வந்து தாக்குதல் நடத்திவிட்டு திரும்பிச்சென்றது.

இதற்கிடையில் நேற்றையதினம் பலாலியில் தாக்குதலில் ஈடுபட்ட அவ்ரோ விமானம் ஒன்று பலாலியில் இறங்க முற்பட்டபோது புலிகள் தாக்கியதால் சேதமடைந்ததாகவும் கூறப்பட்டது.

ஹெலிகள் மட்டும் பலாலியில் தரித்துநின்று தாக்குதலில் ஈடுபடுகின்றன. (86)

## படகுகள் மூழ்கடிப்பு

(திருமலை)

திருமலை திரியாய் பகுதியிலிருந்து 7 படகுகளில் பொதுமக்கள் செல்லும்போது கடற்படையினர் பீரங்கித்தாக்குதல் மேற்கொண்டதில் இரு படகுகள் முற்றாக மூழ்கடிக்கப்பட்டது. இப்படகுகளில் சென்றபொதுமக்கள் அனைவரும் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலில் இருந்து தப்பிய ஐந்து படகுகளையும் அதில் பயணம் செய்த பொதுமக்களையும் கடற்படையினர் கைது செய்து முகாமுக்கு கூட்டிச்சென்று விசாரணையின்பின்விடுதலை செய்தனர். (வி)

## கூரையில் செஞ்சிலுவை குறி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் திருத்தப்படுகின்ற வார்ட்டுகளின் கூரைகளின் மீது புதிதாக பெரிய அளவிலான செஞ்சிலுவைக்குறி பொறிக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (153)

---

வடக்கு - கிழக்கு

# முஸ்லிம் அகதிகளுக்கு ஈரான் நிவாரண உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் அகதிகளாக உள்ள முஸ்லிம்களுக்கு உதவியளிக்கும் முகமாக, ஈரான் இரண்டு விசேட விமானங்களில் நிவாரணப் பொருட்களை நேற்று கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ளது.

கூடாரங்கள், மருந்துவகைகள், தகரங்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், உடுபுடவைகள் ஆகியவற்றை ஏற்றிவந்த மேற்படி இரு விமானங்களும் நேற்றுக்காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தை வந்தடைந்தது.

இப்பொருட்கள் அனைவற்றையும், இலங்கையில் உள்ள ஈரானிய தூதுவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ஹெரோல்ட் ஹேரத்திடம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில்வைத்து கையளித்தார். (ச)

# அச்சுவேலியில் அவ்ரோ குண்டு வீச்சு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் அவ்ரோ விமானத்திலிருந்து நேற்றுக்காலையில் வீசப்பட்ட இரண்டு பீப்பாக் குண்டுகள் வெடிக்கவில்லை.

அச்சுவேலி சன்னதிகோயில் வீதியில் உள்ள நரசிங்க வைரவர் கோயிலுக்கு முன்பாகவும் அச்சுவேலி காலானை ஒழுங்கையிலும் குண்டுகள் வீழ்ந்தன.

பொதுமக்கள் நெருக்கமாக உள்ள இடங்களில் குண்டுகள் வீசப்பட்டபோதிலும் அவை வெடிக்காமையால் பெரும் சேதம், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

பீப்பாக் குண்டுகள் உருக்குலைந்து சிதறிய நிலையில் காணப்பட்டன. பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பொருட்களின் கலவை பீப்பாக் குண்டுகளில் நிரப்பப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (74)

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nmber B/100306/81.